

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி கறம்பக்குடி தெற்கு ஒன்றியத்துக்குட்பட்ட அய்யங்காடு மற்றும் எம்.தெற்கு தெரு ஆகிய ஊராட்சி பகுதிகளில் புதிய பகுதிநேர அங்காடி கட்டிடத்தை திறந்து வைத்து விநியோகத்தை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் தவ. பாஞ்சாலன் முன்னாள் உள்ளாட்சி அமைப்பினர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர்கள் பிரகாஷ், ராமசந்திரன் மற்றும் அனைத்துறை அலுவலர்கள் உள்ளனர்.




பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், பெரம்பலூர், குன்னம் சட்டமன்ற தொகுதி என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ. உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




சூலூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட (BLA2) பாக நிலை முகவர்கள் (BDA) பூத் டிஜிட்டல் ஏஜென்ட்களுக்கான "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம் கோவை, ஈச்சனாரி, செல்வம் மஹாலில் மண்டல கழகப் பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில், மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், கழக சொத்துப் பாதுகாப்புக்குழு துணைத்தலைவர் பொங்கலூர் நா.பழனிசாமி, முனைவர் கணபதி. பி.ராஜ்குமார் எம்.பி., கே.ஈஸ்வரசாமி எம்.பி., கழக வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### மலிவான அரசியல் செய்து மக்களிடையே பிரிவினை வாதத்தை ஏற்படுத்தக் கூடாது!

# நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் பிரதமர் கவனம் செலுத்துவதே நல்லது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, நவ. 2-

மலிவான அரசியல் செய்து மக்களிடையே பிரிவினை வாதத்தை ஏற்படுத்தக் கூடாது. அற்ப அரசியலை நிறுத்தி விட்டு நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் பிரதமர் கவனம் செலுத்துவதே நல்லது என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது. அது வருமாறு:-


தினகரன்
நவம்பர் 1, 2025 சனிக்கிழமை
பிரிவினை வளர்ப்பதா?
பீகார் மாநில தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. தேர்தல் பிரசாரத்தின் போது, "தமிழ்நாட்டில் பீகார் மாநில தொழிலாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்" என பிரதமர் மோடி பேசி இருக்கும் பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளதோடு அரசியல் களத்தில் பெரும் அதிர்வலையை உருவாக்கி உள்ளது. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
இவரைப்போலவே அனைத்து கட்சி அரசியல் தலைவர்களும் தங்களது கண்டனத்தை பதிவுசெய்து வருகின்றனர். "தி.மு.க வேறு, தமிழர்கள் வேறு அல்ல. இது தமிழ்நாட்டு மக்களை கொச்சைப்படுத்தும் செயல் ஆகும். பிரதமர் மோடி அந்த கருத்தை திரும்ப பெற வேண்டும்" என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை கண்டனம் தெரிவித்துள்ளார்.

பீகார் மாநில தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. தேர்தல் பிரசாரத்தின் போது, "தமிழ்நாட்டில் பீகார் மாநில தொழிலாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்" என பிரதமர் மோடி பேசி இருக்கும் பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளதோடு அரசியல் களத்தில் பெரும் அதிர்வலையை உருவாக்கி உள்ளது. தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவரைப்போலவே அனைத்துக் கட்சி அரசியல் தலைவர்களும் தங்களது கண்டனத்தை பதிவு செய்து வருகின்றனர். "தி.மு.க. வேறு, தமிழர்கள் வேறு அல்ல. இது தமிழ்நாட்டு மக்களை கொச்சைப்படுத்தும் செயல் ஆகும். பிரதமர் மோடி அந்த கருத்தை திரும்பப் பெற வேண்டும்" என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை கண்டனம் தெரிவித்துள்ளார்.

வழக்கமாக தேர்தல் பிரசாரத்தின் போது மக்களிடையே மொழி, இனம், மதம் அடிப்படையிலான பிரிவினையை பேசி தேர்தல் ஆதாயம் அடைவது என்பது பா.ஜ.விற்கு கைவந்த கலையாக இருந்து வருகிறது. ஒடிசா மாநில சட்டமன்ற தேர்தல் நடந்தபோது, அங்கு பணியாற்றி வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் மீது பிரதமர் மோடி சாடினார். அவர் மட்டுமின்றி, உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட ஒன்றிய அமைச்சர்கள் அனைவரும் தமிழ்நாட்டை சேர்ந்த அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியை குறி வைத்து விமர்சனம் செய்தனர்.

பீகாருக்குச் சென்றால் - பீகார் மக்களைப் பற்றி பேசாமல், தமிழர்களைப் பற்றி பேசுவது, ஒடிசாவுக்கு சென்றால் அம்மாநில மக்களை பற்றி பேசாமல் தமிழர்களை பற்றி விமர்சனம் செய்வது என எங்கு சென்றாலும் தமிழர்களை வசைபாடுவது பிரதமருக்கு வாடிக்கையாகி விட்டது. இதன்மூலம், பா.ஜ.வினர், உண்மையிலேயே தமிழ், தமிழர்கள், தமிழ்நாட்டிற்கு எதிரானவர்கள் என்பதை பிரதமர் மோடி மீண்டும் நிரூபித்துள்ளார்.

பிரதமர் மட்டுமின்றி, பா.ஜ. தலைவர்கள் ஒவ்வொருவரும், வடமாநிலங்களில் நடக்கும் சட்டமன்றத் தேர்தலின்போது, தங்களது தேர்தல் ஆதாயத்துக்காக தமிழர்களின் மீதான வன்மத்தை வெளிப்படுத்துவது தொடர் கதையாக உள்ளது.

வெறும் வாக்கு வங்கிக்காக வாயில் வந்ததை பேசி, தமிழ்மக்களின் வலையில் சிக்கி, வதைபடக் கூடாது. தலைமை பொறுப்பில் இருப்பவர், தான் சொல்கிற ஒவ்வொரு சொல்லும் முக்கிய மானது, கவனிக்கத்தக்கது.


இந்திய அரசியல் அமைப்பு சட்டம் 8வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, 22 மொழிகள் பேசும் பன்முகத்தன்மை கொண்ட மக்கள் வாழும் இந்த இந்திய தேசம், வேற்றுமையில் ஒற்றுமை காண்கிறது. இப்படிப்பட்ட அமைதியான சூழல் நிலவும் போது, ஜாதி ரீதியாக, மத ரீதியாக, இனம் ரீதியாக மக்களிடையே பிரிவினையை வளர்ப்பது, தமிழர் களுக்கும், பீகார் மக்களுக்கும் இடையே பகையை உண்டாக்குவது என பா.ஜ. கீழ்த்தரமான அரசியல் செய்வது நாட்டுக்கு நல்லதல்ல. இந்த அற்ப அரசியலை நிறுத்திவிட்டு, நாட்டின் மீதும், நாட்டு மக்கள் மீதும் பிரதமர் கவனம் செலுத்துவதே நல்லது.

தலைவன் என்பவர், அனைத்து மக்களையும் அரவணைத்து செல்ல வேண்டும். பொறுப்புடன் செயல்பட வேண்டும். தன்னம்பிக்கை தரும் பேச்சை வெளிப்படுத்த வேண்டும். மாறாக, தேர்தல் ஆதாயத்திற்காக ஒற்றுமையாய் வாழும் மக்களிடையே சண்டையை உருவாக்கும் அபத்தமான செயலில் இறங்கக் கூடாது. ஒரு மாநிலத்தில் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில், மலிவான அரசியல் செய்து, மக்களிடையே பிரிவினை வாதத்தை ஏற்படுத்தி விடக்கூடாது. தலைவன் என்றும் தன்நிலை மறக்கக்கூடாது, தடுமாறக்கூடாது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வளவனூர் எ. கிருஷ்ணமூர்த்தி
### நவம்பர் 3 (2012)



இளம் வயது முதலே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தமது பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

விழுப்புரம் வட்டக் கழகச் செயலாளராகவும் – பல ஆண்டுகள் வளவனூர் பேரூர்க் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

மொப்போர் தியாகியான இவர், 1953–ல் மும்முனைப் போராட்டம் முதல் விலைவாசி உயர்வு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு ஏறக்குறைய 368 நாட்கள் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஆவடி மாநகராட்சியில் ரூ.39.43 கோடியில் மழைநீர் வடிகால் பணிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர்.

திருவள்ளூர், நவ. 3 -

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் குடியிருப்பு பகுதியில் நகராட்சித் துறை மற்றும் குடிநீர் வழங்கல் குறை சார்பில் ஆவடி மாநகராட்சியில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி 2025-26 ல் ஆவடி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் குடியிருப்பு, ஜோதி நகர், அண்ணனூர் மற்றும் ரேவா நகர் பகுதியில் மழைநீர் வடிகால்கள் ரூ.29,67 கோடி மற்றும் 15வது நிதிக்குழு மானியம் 2024-2025 (ம) 2025-2026ல் 64 பணிகள் ரூ.9.76 கோடி மதிப்பில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர்.

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள்கூறியதாவது

நகராட்சி துறை என்பது கிட்டத்தட்ட 25 மாநகராட்சிகள் 138 நகராட்சிகள் 480479 பேரூராட்சிகளாக தொடர்ந்து பதினோராயிரம் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பெரிய நிறுவனமாக நகராட்சியாக துறை விளங்கிக் கொண்டிருக்கிறது. இத்துறையில் நல்லது கெட்டது என அனைத்தும் நடக்கும். அனைத்தையும்அனுசரித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி இந்த துறை மிக சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் இருந்திருக்கிறார் எனவே இந்த துறையில் என்ன செய்ய வேண்டும் என்பது தமிழ்நாடு முதலமைச்சர் நன்கு அறிந்திருக்கிறார்கள்.அதனால் தான் ஆண்டுதோறும் 25 ஆயிரம் கோடி ஒதுக்கி ஒரு லட்சம் கோடி 1முதல்1¼ லட்சம் கோடி நகராட்சி துறைக்காக வழங்கி முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அமைச்சர் நாசர் அவர்கள் சார்பாகஆவடி மாநகராட்சிக்கு இந்த நான்காண்டு காலத்தில் மட்டும் ஆவடி மாநகராட்சிக்கு தமிழக முதல்வர் அவர்களிடம் ரூ.855 கோடியே 14 லட்சம் பெற்றுவழங்கி இருக்கிறார்கள்.

பல்வேறு பணிகளுக்காக சாலை அமைத்தல் பாதாள சாக்கடை பணிகள் கட்டிட போடி முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்பணிகள் சாலை மழை நீர் வடிகால் பணி பூங்கா பணிக்கு தெரு விளக்கு அமைத்தல் குடிநீர் பணிகள் 2865பணிகளுக்கு 855கோடி முதலமைச்சரவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இந்த துறையில் திருவள்ளூர், திருவேற்காடு, பூந்தமல்லி, திருநின்றவூர், திருத்தணி, பொன்னேரி இந்த நகராட்சி களுக்காக 356 கோடி 59 லட்சம் இந்த நான்காண்டுகளில் பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறார். அதோடு மட்டுமல்லாமல் திருவேற்காடுகாக பாதாள சாக்கடை திட்டத்துக்காக 429 கோடியே 55 லட்சமும் பூந்தமல்லிக்கு ரூ.271 கோடியே 79 லட்சமும் திருவள்ளூருக்கு 3 கோடியே 91 லட்சமும் திருத்தணிக்கு 5.3கோடியே என்று இந்த தொகையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். எனவே கிட்டத்தட்ட 2000 கோடி இந்த மாநகராட்சிக்காக முதலமைச்சர் வழங்கி உள்ளார்.தற்போது புதிதாக பணிகளுக்கு அமைச்சர்அவர்கள்கேட்டுக் கொண்டதற்கு இணங்கபணிகள்தொடர்பாக துறைஅகூவலர்கள்வாயிலாக ஆய்வு மேற்கொள்ளபடவுள்ளது.

அதோடு கடந்த வாரம் முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் செம்பரம்பாக்கம் ஏரி நமது குடிநீர் திட்டத்தை 234 எம்.என்டிகூடுதலாக 100% முதலமைச்சர் அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள் தொடங்கி வைத்த போது நாசர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்அவர்கள் ஆவடியில் இருந்து பூந்தமல்லிக்கு சென்னைக்கு குடிநீர் போகிறது எங்களுக்கு குடிநீர் தர வேண்டாமா என கேட்டார் தினமும் 50 தருவதற்காக குடிநீர் வாரியம் சரியாக இருக்கிறது பைப்லைன் போடுவதற்கு நம்முடைய நிர்வாக இயக்குனர் அவர்கள் மூலமாக விரைவிலே பைப்லைன்போடப்பட்டுபாதுகாக்கப்பட்டகுடிநீர்வழங்கப்படும். கடல்நீரை குடிநீராக திட்டம் 400 எம்,என்.டிவருகிறது. அதிலிருந்தும்செம்பரபாக்கம் ஏரியில்இருந்தும்உங்களுக்கு 50ஆவடி மாநகராட்சிக்கு வழங்கஇருக்கிறார்கள். என்னவொரு சிரமம்என்றால் நிறையபோர் வெல்மூலமாக தண்ணீர் எடுக்கப்படுவதால் பாதுகாக்கப்பட்ட குடிநீரின் தேவையில்லாமல் போனது, அனைவரின் வீட்டிலும் போர் வெல் இருப்பதானால், 24x7 திட்டம் இங்குதான் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. எனவேநாசர் அவர்கள் சொன்னது போன்று அதேபோல் பாதாளசாக்கடை திட்டத்திற்கு ரூ.1000 கோடிநிதி தேவைகள் உள்ளது. எனவே ரூ,1500 கோடிநிதி கூடுதலாக தேவைப்படுகிறது இதனைதமிழ்நாடு முதல்வரிடம் கொண்டுசென் அதனை நிரை வேற்றிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

பின்னர் திருநின்றவூர் நகராட்சி ஈசா ஏரி பகுதியில் நீர்வளத்துறை சார்பில் ரூ.9.3 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் தொடர்பாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்திரவிட்டனர்.

இந்நிகழ்ச்சியில்நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் பி.மது சூதன் ரெட்டி,மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆணையர் ஆவடி மாநகராட்சி ரா.சரண்யா மேயர் ஆவடி மாநகராட்சி கு.உதயகுமார், துணை மேயர் சூரியகுமார் , மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபி சேகர், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், வி.அம்மு விஜயன், திருநின்றவூர் நகர் மன்றத் தலைவர் உஷாராணி ரவி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் , பகுதி கழக செயலாளர் நாராயண பிரசாந்த், பேபிசேகர், பொன். விஜயன், திருநின்றவூர் நகராட்சி ஆணையர் செல்வி. ஜீவிதா, ஆவடி மாநகராட்சி பொறியாளர் ரவிச்சந்திரன்திருநின்றவூர் நகராட்சி பொறியாளர் குமார், மாமன்ற உறுப்பினர் கோ.சத்திய ரவி உள்பட மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் திமுக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர்.

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# கோவை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்களாக,

**எ. கலைச்செல்வி,** 119, சுப்பிரமணிய உடையார் வீதி, தெலுங்குபாளையம், கோவை - 39.

**ப. பரிமளா.** 36, செல்வநாயகி கார்டன், பூலுவப்பட்டி அஞ்சல், சிறுவாணி மெயின் ரோடு, கோவை - 641101 ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 1.11.2025

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர், தி.மு.க.
மகளிர் தொண்டர் அணி



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் சிறப்பாக செயல்பட்டு. வரும் தமிழ்நாடு விளையாட்டு துறை சார்பில் வேளச்சேரி SDAT மைதானத்தில் மாற்றுத்திறனாளிகளுக்காக நடைபெற்ற ப்ரீ ஸ்டைல் மற்றும் பேக் ஸ்ட்ராக் ஆகிய பிரிவுகளில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கம் வென்ற வெங்கடேசன், கார்த்திகேயன், விஜயகுமார் ஆகியோரை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர், முனைவர் பி.பழனியப்பன் நேரில் சந்தித்து பாராட்டி பரிசளித்து தொடர்ந்து சிறப்பாக செயலப்பட கூறி ஊக்கமளித்தார்.